2004 பிப்ரவரி 9] [திரு. என். நன்மாறன்]

7. மதுரை கிழக்குத் தொகுதி காமராசபுரம், அனுப்பானடி, கீரைத்துறைப் பகுதியில் உள்ள மக்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் குறித்தும்;

8. மதுரை 48-வது வட்டத்தில் உள்ள பட்டறைத் தொழிலாளர்கள் மற்றும் அனுப்பானடி பகுதியைச் சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

9. மதுரை ஆவின் பாலகத்தில் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ள தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

10. எல்லீஸ் நகர் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தில் வீடு பெற்று முழுப் பணம் செலுத்திய பிறகும் பத்திரம் கிடைக்காமல் உள்ளவர்களுக்கு பத்திரம் வழங்குவது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். நன்மாறன் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலே மணல் எடுப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் துணைத் தலைவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் இல்லையா? (குறுக்கீடுகள்)..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்; அதுபற்றி எல்லாம் ஆளுநர் உரையில் பேசலாம். (குறுக்கீடுகள்)

திரு. எ.வ. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)..

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு வாரம் ஆகிறது. (குறுக்கீடுகள்)..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். பேரவைத் துணைத் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த ஆளுநர் உரையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த, உலகத்தின் வரலாறு பெற்ற ஒப்பற்ற தலைவியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற அன்னை அவர்களின் பொற்பாதம் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடுகள்)

இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் யாவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னையின் ஆட்சிக்கு மேலும் ஒரு மகுடம் சூட்டுவது போல உள்ளது. முத்து முத்தான திட்டங்களையும், நடந்து முடிந்த திட்டங்களையும், நடக்க இருக்கிற திட்டங்களையும் ஒரு பொக்கிஷமாக தொகுத்து அளித்துள்ளது இந்த ஆளுநர் உரை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். அன்பிற்குரிய